[19th January 1965

திரு. ஜே. மாதா கவுடர் : அக் கம்பெனி புத்தகங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அதில் கள்ளக் கணக்கு இருக்கிறதா என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

MR. SPEAKER : The Court must decide. We cannot express an opinion on what the result of the enquiry will be.

திரு. எஸ். முருகையன்: இந்த சோதனையின்போது அவர்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் சென்றார்களா? அல்லது தனியாகச் சென்றார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த சோதனையின்போது அவர்கள் கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீசர்களுடன் சென்றார்கள். சம்பவம் நடந்தபின் போலீஸ்காரர்களை வரவழைத்தார்கள்.

MR. SPEAKER : When they came, when they enquired into it are all matters which will come up in the evidence.

SRI M. KALYANASUNDARAM rose—

MR. SPEAKER : The Hon. Member has already put four supplementaries.

SRI M. KALYANASUNDARAM : It is a very important question, Sir.

MR. SPEAKER : Sri M. Kalyanasundaram may now put one more question.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த கம்பெனியைச் சேர்ந்த சிப்பந்திகளின் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறதா அல்லது கம்பெனியின் நிர்வாகிகள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: யார் யார் தாக்கினார்களோ அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. வழக்குகள் போடப்பட்டிருப்பது கம்பெனி நிர்வாகிகள் மீதா அல்லது டைரக்டர்கள் மீதா என்றெல்லாம் இப்போது சொல்வதற்கில்லை.

புதிய புகைவண்டிப்பாதை.

* 5.கேள்வி—*புலவர் கா. கோவிந்தன் :* கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) ஆற்காடு, செய்யாறு, வந்தவாசி வழியாக இராணிப் பேட்டையையும், திண்டிவனத்தையும் இணைக்கும் புகைவண்டிப் பாதை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்கு யோசனை கூறியதா?

(இ) அதன் முடிவு என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.